Crl.Misc.39

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, COURT, ANNUR

Case No.C.C.No. 384 /2023

Deposition of witness for Prosecution P.W.1 Date : 22.11.2023

| | |
|---|---|
| Name : மொகம்மது சஜ்ஜாது | Father's Name : ஷேக் பாரூக் |
| Village : | Taluk : |
| Caste : | Calling : |
| Religion : | Age : |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 22nd day of November 2023 **(Accused No. 1 - 4 Present)**

சாட்சி அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு முதல் விசாரணை.

நான் தற்போது பெங்களூரில் மைசூர் ரோட்டில் பீமின் குப்பேவில் குடியிருந்து வருகிறேன். நான் வீட்டு உபோயக பொருட்கள் வாங்கி விற்கும் வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும், தொழில் ரீதியாக அவர்கள் எனக்கு பழக்கம். நான் எதிரிகளுக்கு பணம் கொடுக்க வேண்டியிருந்தது. அப்போது எனக்கு வியாபாரத்தில் நஷ்டம் ஏற்பட்டுவிட்டதால் பணத்தினை திருப்பி தர முடியவில்லை, அதனால் எங்களுக்குள் பிரச்சனை ஏற்ப்பட்டுவிட்டது, தற்போது அது பற்றி நான் எதிரிகளுடன் பேசி சமாதானமாகிவிட்டதால் இந்த வழக்கினை மேல்நடத்த விரும்பவில்லை. எதிரிகள் என்ன செய்தார்கள் என்று நான் சொல்ல விரும்பவில்லை. எதிரிகள் மீது நான் காவல் நிலையத்தில் புகார் கொடுத்துள்ளேன். அந்த புகாரை நான் எழுதவில்லை. என்னிடம் காட்டப்படும் புகாரில் கண்டுள்ள கையொப்பம் என்னுடையது தான். (அந்த கையொப்பம் மட்டும் அ.சா.ஆ-**1** ஆக குறியீடு செய்யப்படுகிறது) புகாரில் என்ன எழுதியுள்ளது என்று எனக்கு தெரியாது. எனக்கு தமிழ் எழுத படிக்கத் தெரியாது. இவ்வழக்கு தொடர்பாக போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

சாட்சி பிறழ்சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை செய்ய அரசுதரப்பில் அனுமதி கோரப்பட்டது. அனுமதி வழங்கப்பட்டது. அனுமதியின் அடிப்படையில் அரசு தரப்பில் குறுக்கு விசாரணை

குற்ற இறுதி அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள சம்பவ தேதி, நேரம், இடத்தில் வைத்து இந்த வழக்கின் எதிரிகள் பணம் கொடுக்கல் வாங்கல் தொடர்பாக என்னையும் என் மகனையும் காரில் சென்ற போது கடத்திச் சென்று கொலை மிரட்டல் விடுத்ததாக புகார் மற்றும் வாக்குமூலம் கொடுத்துவிட்டு, இப்போது எதிரிகளுடன் சமாதானமாகிவிட்டு புகாரில் என்ன எழுதியுள்ளது என்று எனக்கு தெரியாது என்று பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

நான் எதிரிகளுடன் சமாதானமாகிவிட்டேன் என்றால் சரிதான். எதிரிகள் மீது இந்த வழக்கில் மேல் நடவடிக்கை எதுவும் வேண்டாம் என்றால் சரிதான். இந்த வழக்கில் எதிரிகளை விடுதலை செய்வதில் ஆட்சேபனை எதுவும் எனக்கு இல்லை என்றால் சரிதான்.

Take down by me/before me in open Court, interpreted/read over to the Witness and admitted by the deponent to be correct.